இவ்வம்சத்தின் மூலபுருஷராகிய சம்பு என்பவர் இக்கலியுகத்தில் சம்புமலேப் பிரதேசத்தில், மஹாராஷ்டிர தேசததிற்கு அதிபதியாக விரம, கொடை முதலிய உயர் குணஙகளால் பிரசித்திபெறறு, நீதிமுறைப்படி ராஜய பரிபாலனம செயது வந்தார்.

*　　　　*　　　　*

அந்த வரத்தினபடியே சம்புராஜாவின உதர சமுத்திரத்தில் குமாரத்தினக குவியலெனக் கீர்த்தியுடன் "ஏகோஜி ராஜன பிறந்தார்." எனறு தொடங்கி;

"தற்சமயம் சரபோஜி மகாராஜா எப்பொழுதும் சிவபுராணத்தைக் கேட்டுக்கொண்டும், சிவபூஜையைச செயதுகொணடும், யாத்திரை செயது கொண்டும் சரியான வழியில காலததைக கழிககிருா.........சரியான மார்க்கததில இராச்சிய பரிபாலனம் செய்து வருகிருர். (பக் 136)

*　　　　*　　　　*

இப்படிப்பட்ட இந்த சரித்திரம், முதல வாணத்தைச சேர்ந்தவரும மகாராஷ்டிர ஜாதியைச் சேர்ந்தவரும், பகவந்த ராயரின பௌததிரரான விட்டல ராயரின் புத்திரரும், தற்சமயம சோழ நாட்டின அதிபதியான ஸ்ரீமந் ராஜே ஸ்ரீ மகாராஜா சதரபதி சரபோஜி மகாராஜா சாகேப அவர்களின் உண்மையான ஊழியரும் காரியதரிசியுமான, காசியப கோததிரம், ஆசுவலாயன சூத்திரம், ரிக்வேத சாகையைச் சேர்நத 'பாபுராவ' எனபவரால், சாலிவாகன சகம 1759, ருதிரோத்காரி வருஷம், மார்கழி மாதம், கிருஷ்ணபக்ஷ அமாவாசைக்குச் சரியான கி. பி. 1803 ஆம் டிசமபர் மீ 13-உ எழுதி முடிககபபடடது" என்று முடிநதிருக்கிறது.

இது, கி பி 1803 என்பதால், சரபோஜிமன்னர் காலத்திலேயே வெட்டப் பட்டதாகத் தெரிகிறது ஆயினும் இது குறித்து ஒருசாராருக்குக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. "**சிவபாரதம்**" என்ற நூலின் ஒப்புமையினால் இவ் வரலாறு சற்று மாறுபடுகிறது" என்றும், "வடநாட்டில் 'வெங்கோஜி' என்றழைக்கப்பட்டிருந்தும் தமிழ்நாட்டில் 'ஏகோஜி' என்பது இடைச் செருகல்" என்றும், மகாராஷ்டிரத்தில் உள்ள பூனா நகரைச் சேர்ந்த மேஜர் 'நாராயண பாலகிருஷ்ண கத்ரே' அவர்கள் கூறுகின்றார்.

மேலும், அவர், 'இக்கல்வெட்டு சிவாஜி II மன்னரால் வெட்டப்பட்டது' என்ற சிலர் கூற்றினை மறுக்குத் தன் கருத்தாக "இக் கல்வெட்டு துளஜா மன்னருடைய காலத்தில் கொஞ்சம் செய்திருக்கவேண்டும் என்று கருத இடமிருக்கிறது. ஆங்கிலேயருடைய காலத்தில் சிவாஜி II ஏற்படுத்தினார் என்பது பொருந்தாது. இக் கல்வெட்டு யார் காலத்தில் ஏற்பட்டது என்று ஐயப்பாடாகவே உள்ளது" என்று கூறுகின்றார். மேலும் இவர் சில கருத்துக் களைக் கூறி இதனை நிலைநாட்டுகின்றார். இவை ஆய்வுக்குரியன.

இக் கல்வெட்டு கூறும் செய்திகள் :— ஒரு முறையான வரலாறு, மகாராஷ்டிர வமிசத்தைப்பற்றி அறிய முடிகின்றது. சம்பு மன்னர் முதலாக ஆதி சிவாஜி ராஜா வரையிலும், அவர் தம் உடன் பிறந்தார் ஏகோஜி முதல் தன் வரையிலும் ஆன வழித்தோன்றல்களையும், அவ்வப்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் சுவைபடக் கூறியுள்ளார். ஏகோஜிக்கு முன் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் முழுச செய்தியினையும் கூற வாய்ப்பில்லை போலும். இக் கல்வெட்டில் அரசனாலும், எழுத்தாளராலும், கல் தச்சராலும் சில மாறுபாடுகள் காணப்படுகின்றன.

எனினும் தன்னடக்கமாகத் தற்புகழ்ச்சியின்றி, இக் கல்வெட்டு காணப் படுவது வியப்புக்குரியது. மன்னர்கள் தங்கள் மெய்க்கீர்த்திகளைக் கூறிய பின்னரே செய்திகளைக் கூறுவர். ஒரு சிறு செயலுக்காகக் கல்வெட்டு ஏற்படுத்தினும், தமது மெய்க்கீர்த்தியே பெரும்பகுதி இடங்கொள்ளும். இம் மன்னனின் கல்வெட்டுக்களில் "**ஸ்ரீ மங்கள மூர்த்திர் ஜெயதி ஸ்ரீமத் போசலகுலமணி சரபேந்திர மகாராஜா சாயேப் அவர்கள்**" என்று ஒரு சிலவற்றில் மட்டுமே காணப்படுகின்றன. பிறவற்றில் "**ராஜ ஸ்ரீ சரபோஜி மகாராஜா**" என்றே காணப்படுகின்றன.

'மிகப்பெரிய கல்வெட்டு இது' என்றுகூடக் கூறத் தகுதிவாய்ந் துள்ளது இது. இதில் சரபோஜி மன்னர் செய்த பல அரிய செயல்கள் இடம் பெறவில்லை. இவர் பட்டத்திற்குவந்த 6-வது ஆண்டில் ஏற்பட்டதால் அக்குறை ஏற்பட்டுள்ளது. இக் கல்வெட்டில் குறிப்பிடத்தக்க சுவையான செய்தி ஒன்றுண்டு.

தஞ்சையில், மராத்திய ஆட்சி, 'ஏகோஜி' மன்னரால் ஏற்படுத்தப் பட்டபோது, அவர்தம் இளவல் சிவாஜி மன்னர் தஞ்சைக்கு வந்து, ஏகோஜி மன்னருக்குத் தெரியாமல், தஞ்சாவூர்க் கோட்டையைச் சுற்றிப் பார்த்து விட்டு. தான் வந்ததற்கு அடையாளமாகத் தன் தலைப்பாகையை ஒரு கடையில் வைத்துவிட்டு (பக். 65)த் தனது இருப்பிடம் சென்று, ஏகோஜி மன்னருக்குக் கடிதம் எழுதித் தான் வந்து தஞ்சையின் அரிய கோட்டையைப் பார்த்ததாகவும், அது கருடனைப்போன்ற உருவத்துடன் இருப்பதாகவும், தான் வந்ததற்கு அடையாளமாக வைத்த தலைப்பாகையை வாங்கி அனுப்பு மாறும் தெரிவித்தார். பிற செய்திகளை ஷெ நூலில் காணலாம்.

இப் பெரியகோயிலிலுள்ள வேறு (S.I I. 420 of 1924) கல்வெட்டிறைல், இக் கோயில் திருச்சுற்றில் (பிரகாரத்தில்) உள்ள விநாயகர் கோயிலைச் செப்பம் செய்து, கருவறையும், அர்த்தமண்டபமும், மகாமண்டபமும், பிற மண்டபங்களும் கட்டினார் என்று தெரிகின்றது. மேலும், இதில் உள்ள பழைய விநாயகர் உருவத்தினை எடுத்துவிட்டுப் புதியதோர் விநாயகர் உருவச்சிலையினை அமைத்தார்.

இக் கோயிலின் பின் திருச்சுற்று மாளிகையில் 108 சிவலிங்கங்களை அமைத்துக் குடமுழுக்குச் செய்து, அதன் நித்திய பூசைக்காக, சென்னை, மிஸ்தர் ஹாரிங்டன் அவர்களிடம் 29-5-1802-ல் 5,000 புலிவராகன், வருடத் திற்கு 10 வராகன் விகிதத்தில் கொடுத்து, ஒவ்வொரு ½ ஆண்டிற்கு 250 புலிவாராகன், புலிவராகன் 1க்கு ரூ. 3-8-0 வீதம் ரூ. 875/- வட்டி பெற்று, அதனைத் தவறுமல் செய்ய ஏற்பாடு செய்தார்.

திருச்சுற்றுக்குச் செங்கல் தளவரிசையிட்டுள்ளார். பெருவுடையாருக்கு வெள்ளி (ரிஷப வாகனம்) விடையூர்தி செய்துவைத்தார். மேலும் முருகர் சந்நிதிக்கு முன்னுள்ள கல்யாணமண்டபம் இவர் கட்டியதாகத் தெரிகின்றது.

மற்றுமொரு குறிப்பு S. I. I. Vol. II Introduction Page 13 Footnote-ன்படி.

"The Mahrathi Inscription on the inner wall of the south enclosure which is dated in Saka 1723, Durmathi (= A. D. 1801-02) states that the Mahratha King Sarphoji Maharaja executed elaborate repairs to the shrines of Ganeasa, Subramaniar, The Goddess (Brihannayaki), Sabhapathi, Dakshinamoorthy and Chandesvara, built one or two new mandapas and renovated the prakara walls, the temple kitchen and the flooring of the courtyard" என்று கூறுகின்றது.

இவர் எடுத்த கோயில்களும், புதுக்கிய கோயில்களும், விரிவுபடுத்திய கோயில்களும், அறக்கட்டளை செய்த கோயில்களும், பிறவும் மிகப்பலவாகும். அவற்றுள் ஒன்றிரண்டு காண்போம்.

தஞ்சை அரண்மனை வாயிலுக்கு எதிரே, கீழராஜ வீதியில், அருள்மிகு **'பாண்டுரங்கன் கோயில்'** இருக்கிறது. இதனை, மன்னர் சரபோஜி, தான் பண்டரிபுரம் சென்றுவந்ததன் நினைவாகக் கட்டுவித்துள்ளார். அதன் கல்வெட்டு :—

"ஸ்ரீ மங்களமூர்த்திர் ஜெயதி ஸ்ரீமத்போசலகுலமணி சரபேந்திர மகாராஜா சாயேப் அவர்கள், ஸ்ரீ பாண்டுரங்காலைய பசனசாலா தர்மம் சொஸ்தி ஸ்ரீ சாலி வாகன சகாப்தம் 1740, கலியுக சகாத்தம் 4919 யிதின் செல்லாநின்ற வெகுதானிய ஞூ மாசி-மீ அபரபட்சம் சதுர்த்தசி சோமவாரம், மகாசிவராத்திரி சுபதினத்தில் இந்த தர்மம்" என்பதாகும்.

இக் கல்வெட்டு, கோயில் முன்வாசல் வலது புறத்தில் மராத்தியிலும், இடது புறத்தில் மேலே தமிழிலும், கீழே தெலுங்கிலும் (ஒரே கல்லில்) வெட்டப்பட்டுள்ளது. இதன் நாள் 1-3-1819 ஆகும். மேற்கு நோக்கியுள்ள இக்கோயிலின் பாண்டுரங்கனைப் பண்டரிபுரத்தினின்றும் கொண்டுவந்து அமைத்ததாகக் கூறுவர். பண்டரிநாதனைப் பஜனை செய்வதற்கேற்ப 4 மண்டபங்கள் அமைந்துள்ளன. திருச்சுற்று, நந்தவனம், கருவறைக் கோபுரம், முன்கோபுரம் முதலியன அழகுற அமைந்துள்ளன.

இக்கோயிலின் தெற்கே சுமார் 100 கிலோ மீட்டர் தூரத்தில், கீழராஜ வீதியில், கீழ்சரகில் கிழக்குநோக்கிய கோயிலொன்று, அருள்மிகு **"மணிகர்ணிகேசுவரர் கோயில்"** என்ற பெயரால் இருக்கிறது. இதற்குப் 'புதுக்கோயில்' என்ற பெயரும், இதனை ஒட்டிய சந்துக்குப் 'புதுக்கோயில் சந்து' என்ற பெயரும் இன்றும் வழங்கி வருகின்றன.

இவர், காசியாத்திரை செய்து திரும்பியபின், இது கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. இவர், காசியில் கங்கைக் கரையில் **'மணிகர்ணிகா'** என்ற படித்துறை கட்டியுள்ளார். அதன் நினைவாக இக் கோயிலெழுப்பி, மூலவருக்கு அருள்மிகு **'மணிகர்ணிகேசுவரர்'** என்ற பெயர் சூட்டி, அம்மன் சந்நிதி, பரிவார தெய்வங்களான விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர், சனீசுவரர், பைரவர், சூரியன் முதலானவர்கள் சந்நிதியும் மடைப்பள்ளி முதலியனவும் கட்டியுள்ளார். பெரிய அளவில் மூன்று கோபுரங்கள் அழகுற அமைந்துள்ளன.

மேற்கூறிய செய்திகளைக்கூறும் கல்வெட்டு காணப்படவில்லை. ஆயினும் இக் கோயிலில் பிற மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன,

1. 23-8-1865ல் தஞ்சாவூர் அரண்மனை அகிலாண்டபாய் அம்மாள் நடராசர் சந்நிதியைக் கட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

2. 19-12-1892ல் ஷை அரண்மனை ஸ்ரீமன் மங்களவிலாசம் பெரிய தர்மாம்முபாயி அம்மாள், ஏஜெண்டு ஆபீஸில் ரூ 250/- கொடுத்து, அதன் வருமானம் கொண்டு, இக் கோயிலுடையாருக்குப் பதினெட்டாம்பெருக்குக்கு ரூ. 8/-ம், அன்னபிஷேகத்துக்கு ரூ. 5/-ம் கொடுத்து, அபிஷேகம், நைவேத்தியம், சுவாமி புறப்பாடு முதலானது செய்யவேண்டும் என்று கூறுகிறது.

3. 23-4-1897ல் ஷை அரண்மனை கோரிலட்சுமுபாயி அம்மாள், கஜானாவில் ரூ 1000/- கொடுத்து, அதன் ஆண்டு வருமானம் ரூ. 60/ ஐக் கொண்டு நித்தியபூசை, நைவேத்தியம் முதலானதுகள் செய்ய ஏற்படுத்தினதாகத் தெரிகின்றது.

தஞ்சாவூர் மேலராஜ வீதியில் அருள்மிகு '**டபீர் விஜய ராமசாமி கோயில்**' இருக்கிறது. டபீர் ராமர் என்றும் அழைக்கப் பெறுவர். இக் கோயிலின் வாயிற்படியில், மராத்தியில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டொன்று காணப்படுகிறது. அதில் சரபோஜி மன்னர் கி. பி. 1805-ல் இக்கோயிலைப் புதுப்பித்துள்ளதும் இக்கோயில் பெருமாளுக்குப் பெரியதோர் தேர் செய்து கொடுத்ததும் அறியக் கிடைக்கிறது.

தஞ்சையில் 'எல்லையம்மன் கோயில் தெரு' என்று ஐயன் கடைத் தெருவையடுத்துள்ளது இதில் கிராம தேவதை எனப்படும் அருள்மிகு '**எல்லையம்மன்**' கோயில்கொண்டுள்ளாள். இதனை 'ரேணுகாதேவி' என்று மராத்தியர்கள், தங்கள் குலதெய்வமாகக் கொண்டாடுவர். பழையதான இக் கோயிலை, சரபோஜி மன்னர் தனது ஆட்சியாண்டில் விரிவுபடுத்திப் புதுக்கினார். கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நர்த்தன மண்டபம், முன்கோபுரம், வாயிற்படிகள், திருச்சுற்று, அதிலுள்ள மாதங்கி அம்மன் சந்நிதி, மற்றும் நாக கன்னிகை, சண்டிகேசுவரர் முதலான பரிவார தெய்வங்களின் சந்நிதிகள், மடைப்பள்ளி, மதிற்சுவர், தளவரிசை முதலானவைகளைச் செய்து, திருப்பணி செய்துள்ளார் என்பது இக் கோயிலின் நிலைவாயிற்படி நிலைக்கல்லில் மராத்திய எழுத்துக்களில் பொறிக்கப் பட்டுள்ளது.

தஞ்சாவூர், வடக்கு ராஜவீதி (தற்போது தூயபேதுரு உயர்நிலைப் பள்ளியின் மேற்கு)யில் அருள்மிகு "**இரத்தினகிரீஸ்வரர்**" திருக்கோயில் உள்ளது. இக் கோயில், சரபோஜி மன்னர் காலத்தில் கட்டப்பட்டது. இதற்கு ஒரு சுவையான வரலாறுண்டு.

மன்னர் சரபோஜி, தனது காமக்கிழத்தியாம் முத்தம்பா பாயிசாகேப் அவர்களின் உயிர்ப்பலி காரணமாக ஒரததநாட்டில் கிடைத்த புதையல் பெரும்பொருள் கொண்டு, அவர்களது வேண்டுகோளின்படி, ஆண்டோர் சத்திரம் கட்டினர். ஒரு பெருவேள்வியும் செய்தார். இப பெருவேள்விக்குரிய கல்வெட்டொன்று ஷ சத்திரத்தின் வாசலில உளளது. அவ வேள்வியின் அவிர்பாகததினை யாரும ஏறறுக்கொளளவில்லை. அதனை ஏற்றுக்கொள வாருக்குப் பெரும்பொருள் அளிபபதாக மன்னர் கூறவே, பழமானேரி அண்ணு சாஸ்திரிகள் என்பார், அதனை ஏறறு, மிகுசெல்வத்தையும் பெற்று, அப பொருளகொணடு இந்த அருள்மிகு இரத்தினகிரீசுவரர் கோயிலைக் கட்டி, காசியினின்றும இலிங்கம கொணடுவந்து அமைத்து வழிபடலானர். இக் கோயில் ஷ சாஸ்திரிகளுககும, அவர் தம வழித்தோன்றல்களுககும் சொந்தமானது.

தஞ்சைககு வடக்கே சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் விண்ணாற்றங் கரைக்குத் தெற்கே கோயில கொணடெழுந்தருளியுள்ள அருளமிகு '**ஆனந்தவல்லி சமேத தஞ்சபுரீசர்**' கோயில மிகவும தொன்மை வாய்நததும் வரலாறறுச் சிறப்புடையதும, புராண வரலாறு கொணடதும் ஆகும. இக் கோயில் '**ஆனந்தவல்லி அமமன் கோயில்**' என்றே வழங்கப்பெறும்.

பராசக்தியாகிய காளிதேவி, தஞ்சன், தண்டகன், தாரகன் ஆகிய அசுரர்களைக் கொன்றபின், மகரிஷிகள ஆனந்தம் அடையும் வண்ணம் சூலத்துடன் காட்சியளிததால '**ஆனந்தவல்லி**' எனறும், தஞ்சைக்குப் பெயர் கொடுத்ததால் '**தஞ்சேசா**' என்றும தலபுராணம கூறும.

இந்த ஆனந்தவல்லி அம்மன் சநநிதிக்கு எதிரே நர்த்தனமண்டபமும் நந்திமண்டபமும் கட்டிய செயதியை, அம மணடபததின் மேறகு வெளிப பகுதியில் தெற்கு நோககிய மராததிக கலவெட்டு:

'ராஜஸ்ரீ சரபோஜி மகாராஜா அவர்கள் ஸ்ரீ ஆனந்தவல்லி அம்மன் சந்நிதியில் நர்த்தனமண்டபம் செஙகல்லால் கட்டப்பட்ட தருமம்' என்று கூறுகிறது.

சரபோஜி மாமன்னரின் பாட்டனாரான சத்திரபதி பிரதாபசிம்ம மகாராஜா காலத்திலிருநதே, பிரெஞ்சுக்காரருக்கும, மராத்திய மன்னர் களுக்கும் போர் நடந்து வந்தது. சரபோஜி மன்னர் காலததில கி.பி. 1814ல் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சு நெப்போலியன் போனபார்த்தேக்கும் போர், வாட்டர்லூ என்ற இடத்தில் நடந்தது. அப்போரில் ஆங்கிலேயருக்கு உதவியாகப் பெரும் சேனைகளை, மன்னர் சரபோஜி உதவினர். அதனால ஆங்கிலேயர் வெற்றிபெற்றனர். அவ் வெற்றியைத் தன் வெற்றியாகக் கருதிப்

பட்டுக்கோட்டை வட்டம், சாளுவநாயக்கன பட்டணத்தில் ஒரு கப்பல் துறைமுகத்தை ஏறபடுத்தி, அதில் நினைவுச்சின்னமாக "மனோரா" என்ற வெறறிச் சின்னத்தை எழுப்பினர். அது கலங்கரை விளக்கமாகவும அக்காலததில பயன்பட்டது. இதன் சிறப்பு விரிப்பில் பெருகும். இதில் உள்ள கலவெட்டு:—

"இஙகிலிசு சாதியார் தங்கள் ஆயுதங்களினுலடைந்த செய சந்தோஷங் களையும போன பாற்தெயின் தாழ்த்தபடுதலையும நினைவு கூர்தற்காக இஙகிலீசு துரைத்தனத்தின் சிநேகிதரும் படைத்துணைவருமாகிய தஞ்சாவூர் சீர்மை மகாராசாச சத்திரபதி சறபோசி மகாராசாவவர்கள இந்த உப்பரிகையைக் கட்டிவைத்தார்கள், சகம் ௲எ௱௩௰௬" என்பதாகும. இது தமிழ, ஆங்கிலம, மராத்தி, தெலுங்கு, உருது ஆகிய மொழிகளில் உள்ளன.

இதனையடுத்த 'மருங்கைப்பள்ளம்' என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலில ஒரு கல்வெட்டும, 'பாப்பு ராஜபுரம்' என்ற ஊரில் வைத்திய நிபந்தக் கலவெடடு ஒனறும், அறந்தாங்கி சிவன்கோயிலில் ஒரு அறக் கட்டளைக கல்வெட்டும, கும்பகோணம் இராமசாமி கோயிலில் ஒரு கல்வெட்டும் பிறவும அங்காங்கே காணப்படுகின்றன.

மன்னர் சரபோஜி அவர்கள்தம் கல்வெட்டுக்கள் யாவும் ஒருசேர வெளிவருமாயின் வரலாற்றுக்குப் பயன்தரும.

வாழ்க சரபோஜி மன்னர்.

மருத்துவத் துறையில் மன்னர் சரபோஜி

(புலவர் இரா. திலகம், தஞ்சாவூர்.)

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியமான தஞ்சையம்பதியைத் தலை நகரமாகக் கொண்டு ஆண்டு வந்த மரபினர் பலர். அவர்களுள் சோழர்களை யடுத்த நாயக்கர்களுக்குப்பின் வந்த மராட்டிய மன்னர்களே வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுள்ளனர். இம்மராட்டிய மன்னர்கள் வரிசையில், இன்றும் அழியாப்புகழ் பெற்று விளங்கும் மாமன்னர் சத்திரபதி சரபேந்திர பூபாலர் என்கின்ற சரபோஜி மன்னரேயாவர். இவர் துளஜா மகாராஜாவின் சுவீகாரபுத்திரர் என்றும், இவர் ஆட்சிக்காலம் கி. பி. 1798 முதல் 1832 முடிய என்றும் வரலாற்றால் அறியக் கிடைக்கின்றது.

இம் மாமன்னர் சரபோஜி, உலகத்திலே அழியாப்புகழ்பெற்று எந்நாட்டவரும் கண்டு களிக்கும் வண்ணம் கலைக்கோவில் எனத்திகழும் சரசுவதிமகால், சங்கீதமகால், தன்வந்திரிமகால் போன்ற 18 மகால்களை அமைத்தார். அதில் "தன்வந்திரிமகால்" என்ற வைத்திய ஆராய்ச்சிக் கழகம் மன்னர் சரபோஜி வைத்தியத்துறையில் ஆற்றிய அரும்பணிகளைப் பற்றிக் கூறுகிறது.

அரசர்கள் 32 வகை ஆயுதங்களுடன் நான்கு வகைச் சேனைகளையும் காலமறிந்து பகைவர்களை வென்று உயிர்களைக் காப்பதுபோல தேவ சிகிச்சை-1, இராக்கத சிகிச்சை-1, மானிடசிகிச்சை-30 என்கிற சிகிச்சாயுதங்களையும், ஔஷதியென்கிற நால்வகைச் சேனைகளையும் கொண்டு காலமறித்து வியாதிகளென்கிற பகைவர்களை வென்றார் மன்னர் சரபோஜி. வைத்திய முறைகளை மக்கள் அறிந்து கொள்ள வைத்திய ஆராய்ச்சிக்கழகம் என்னும் தன்வந்திரிமகாலை ஏற்படுத்தி, சித்த வைத்தியம் முதலான மருத்துவங்களின் அனுபோகங்களில் சிறந்த பண்டித சிரோன்மணிகளைக் கொண்டு, தமது ராஜ குடும்பத்திற்கும், நகரவாசிகளுக்கும் உபயோகமாகும் பல விசேஷதிரவியங்களைச் செலவிட்டு மருந்துகளைக் கையாண்டு வந்த அனுபோக முறைகளை மராட்டிய மொழியில் வசன நடையிலும், தமிழ் மொழியில் செய்யுள் வடிவத்திலும் ஓலைஏட்டுப் பிரதிகளில் எழுதி வைக்கச் செய்தார். அச்சுவடிகளை இன்றும் சரசுவதிமகால் நூலகத்தில் காணலாம்.

இவர், நமது சரீரத்தில் அமையப்பெற்ற ஒவ்வொரு அங்கத்திற்கும் தனித்தனி முறையில் வைத்திய முறை கூறியுள்ளார். அவை 18 தொகுதிகளாகும். அம்முறையில் முதலில் இடம் பெறுவது ஐம்பொறிகளில் முக்கிய

மான கண்கள், காதுகள், நாக்கு, மூக்கு, இந்நான்கும் அடங்கிய சிரசேயாகும். "எண் ஜாண உடம்புககு சிரசே பிரதானம" என்னும பழமொழியும நம் நினைவிறகு வருகிறது ஆகவே இந்த நானகும அடங்கிய சிரசுககுச் சிகிச்சை செய்யும் முறைககு சிரோரோக சிகிசசை என்று பெயா.

இந்த சிரோரோக சிகிசசையில தனிபபடட சிரோரோகங்களன்றி மூக்குநோய், வாய்நோய, உதடு, பறகளின் நோயகள, காதுநோயகள், தொண்டையிலேற்படும நோயகள முதலியவை பறறியும, அவைகளின குறிகுணங்களைப் பறறியும விளக்குகிறது. கர்ணசூலை, வாதகர்ணசூலை ரோகம், பிததகர்ணசூலை ரோகம, கபகாணசூலை ரோகம, ரதத கர்ணசூலை ரோகம், ஸந்நிபாத கர்ணசூலை ரோகம, காணநாதம, கூசிசர்ணம இது போன்ற இன்னும பலவகை காது நோயகள் உளளன.

மருந்து

காது மந்தம், வாய்வுக்கு மருள் எண்ணெய் :

மருள்வேர் (சாறு) 1 சேர், நல்லெண்ணெ 1 சேர, இவைகளை ஒனறு சேர்த்து வசம்பு 1 காசு எடை, சுககு 1 காசு எடை, மிளகு 1 பலம, பூண்டு 1 பலம் இவைகளை இடிதது எண்ணெயயுடன் கலநது சிவக்குமபடி எரிததுப பதத்திலிறக்கிக்கொண்டு தலையில தேயததுத் தினநதோறும ஸநாநம செயது வந்தால காதுமந்தம் வாயு முதலியவை தீரும்

இங்ஙனமாக சிரோரோகத்தில அடங்கிய ஒவ்வொரு வியாதிககும் தனித்தனியாக ஆயுர்வேத முறையில மருததுவம கூறபபடடுள்ளது.

அடுத்து ஐம்புலன்களில் முககியமானது கண். அககண்களின அமைப்பு, அவற்றில் உணடாகும வியாதிகளுக்கு மருததுவமும் கூறுகிறது நயனரோக சிகிச்சையாகும். இந்த நயனரோக சிகிச்சையை ஆராய்ந்து பார்த்தால் கண்களுககு இததனை வியாதிகள உண்டு என்பதை அறியலாம். அவற்றிற்கான சிகிச்சையும் கூறபபட்டிருக்கிறது. கண் உறுப்புக்களுக்குள் சென்று மிகக் கடுமையாகப் பாதிக்கும் கண்நோய்கள கண்கலக்கம, கண் வீக்கம், பீளைசாரல, கனததல், அனத்தல், கண்களில்வலி, கண்களில் சிவப்பு, இரைப்பையில் குத்துவலி, இமைகளினடியில் உருத்தல், கண் கூச்சம், பார்வைக் குறைவு முதலியன. இவ்வியாதிகளுக்கு நயனரோக சிகிச்சை எனற நூலில் மருந்துகள் கூறபபடுகின்றன. ஆயுர்வேத முறைப்படி கண்களிலேறபடும் ரோகங்கள் 94 ஆகும் என அவர் மருத்துவத்தினால் அறியப்படுகிறது.

அடுத்து இவர் வைத்திய சாத்திரத்தில் இடம்பெறுவது காச, சுவாச சிகிச்சையாகும். இவற்றில் வாத காச இலட்சணங்கள், பித்தகாசத்தின் குறிகள், கபகாசத்தின் குறிகள், சுவாசம் வருகின்றவிதம், பிரதமகம், காச ரோகம் முதலான சிகிச்சைகள் அடங்கும். இவ்வியாதிகளுக்கு இவர் சித்த வைத்திய முறைப்படி மருத்துவம் கூறுகிறது. உதாரணமாக,

இருமலுக்கு சுக்காதிக் கற்பம் :

சுக்கு திப்பிலி, கடுக்காய்த் தோல் இம்மூன்றையும் சரி எடை எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு அதில் தண்ணீர் சிறிதுவிட்டு, அம்மியின்மேல் வைத்து, நேகவரைத்துக்கொண்டு அவ்விழுதில் ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும். இருமல் தீரும். இம்முறை அவர் அனுபவ ரீதியில் கண்டதேயாகும்.

குன்மரோகசிகிச்சை என்ற தொகுதியில் எட்டுவித குன்மங்களையும் அவற்றிக்கான மருத்துவத்தையும் கூறுகிறர். குன்மரோகம் என்பது வயிற்றில் உண்டாகும் வியாதிகளைப்பற்றிக் கூறுவது வாயுகுன்மம், வாதகுன்மம், பித்த குன்மம், கபகுன்மம், சன்னிகுன்மம், எரிகுன்மம், சக்திகுன்மம், வலிகுன்மம் முதலியன.

அடுத்து நீரிழிவு சிகிச்சை என்ற தொகுதியில் நீரிழிவு பிரமேஹம், பிரமியம், மேகம், வெட்டை என்ற பலவகை மூத்திர ரோகங்களுக்கான முறைகளும் அவற்றிற்கான சிகிச்சைகளையும் பற்றிக் கூறுகிறர். இவை பிரமேஹம் என்ற இருபது வகை ஜலரோகங்களையும், மேகநீர், மேகப்புண் முதலிய தோலைப்பற்றிய வியாதிகளையும் கூறுகிறது.

வாதரோகசிகிச்சை என்னும் தொகுதியில் மனோவியாதிகள், தேக வியாதிகளைப்பற்றிக் கூறுகிறர். மனோவியாதிகளுக்கு ரஜோகுணமும், தமோ குணமும் காரணங்களாகும் என்றும், தேக வியாதிகளுக்கு பயம் முதலியன காரணங்களாகும் என்றும் கூறுகிறர். வாத, பித்த, கபங்கள் செய்யும் வேலைகள் பற்றியும், பித்தம், கபம், வாதத்தின் ஸ்தானங்கள், வாதத்தின் வகை, பித்தத்தின் வகை, சிலேஷ்மத்தின் வகை வாத வியாதிகளின் பொதுவான சிகிச்சை முதலியன கூறுகிறர்.

உதாரணமாக **அண்டவாதத்திற்கு மருந்து :—**

வெள்ளைப்பூண்டுத்திரி, வெங்காயம், முடக்கொத்தான் கொழுந்து, கழற்சிக்கொழுந்து இவை வகைக்கு 3 பிடி தனித்தனியே வேக வைத்து 1உரி ஆமணக்கெண்ணையிற் பிசைந்து வெயிலில் வைத்து 3 நாள் ஒரு வெருகடிப்

பிரமாணம் விதம் வெற்றிலையில் வைத்து, காலையில், சாப்பிட்டு வீக்கத்தின் மேலும் பூச அண்டவாதம் தீரும்.

ஜுரரோக சிகிச்சையில் ஜுரஉற்பத்தி, ஜுரத்தின் வகைகள், வாத, பித்த சந்நிபாத ஜுரத்தின் வகைகள், லக்ஷணங்கள், பூர்வரூபம், ஜுரத்தின் குறிகள் கூறப்படுகின்றன ஆகந்துக ஜுரவகைகள். தாதுகதஸ்வரங்களின் லக்ஷணங்கள் கூறப்பட்டுள்ளன.

பாண்டு காமாலை சிகிச்சையில் பாண்டுநோய் வரும் காரணங்கள், ஏற்படும் விதம், காமாலையின் வகைகளான வாதகாமாலை, பித்தகாமாலை, சிலேத்தும காமாலை, பித்தவாத காமாலை, மஞ்சட்காமாலை, ஊதுகாமாலை முதலிய பலவகையான காமாலைகளின் வகைகளும், அவற்றின் இலட்சணங் களும் ஆங்கில முறைப்படி குறி குணங்களும், சிகிச்சை முறைகளும் கூறப் பட்டுள்ளன.

உதாரணமாக **கைகால் வீக்கத்திற்கு மருந்து –**

ஆவாரம் பட்டை, சுக்கு இவ்விரண்டையும் சமனெடையெடுத்து 8 மடங்கு ஜலம்விட்டு, எட்டிலொன்றுகக் காய்ச்சி வடிகட்டிச் சாப்பிடக் கைகால் வீக்கம் தீரும்.

விஷரோக சிகிச்சையில் விஷத்தின் பொதுவான குணங்கள், ஸ்தாவர விஷ நிதானம், பாம்புக்கடியிலுள்ள பேதங்கள், விஷக்கடிக்கும், விஷமற்ற கடிகளுக்கும் உள்ள பேதங்கள், ஸர்பஉற்பத்தி, ஸர்பங்களுக்கு எதிரிகள், விஷத்தின் இருப்பிடம், ஸர்பங்களின் ஜாதிகள், விஷப்பற்களின் கடி லக்ஷணம், விஷப்பரீக்ஷை, பாம்பு கடிக்கக் காரணம், மரணலக்ஷணம், இன்னின்ன தினங்களில் கடிக்கும் பாம்புகளின் பேதமும், விஷம் இருக்கும் இடமும், நல்லபாம்பு கடித்தால் அதிலிருந்து உண்டாகும் வேகங்கள் முதலியனவும், சிலந்தி, எலி, வெறிநாய், தேள் முதலியவற்றின் விஷங்கள் பற்றியும், சிகிச்சையும், மேலும் அரளி, சேங்கொட்டை, ஊமத்தை, எட்டிக் கொட்டை, அபினி, கஞ்சா, நாபியின் முதலியவற்றின் நஞ்சு பற்றியும் கூறுகிறது.

உதாரணமாக **எலிகடிக்குச் சாறடை ரொட்டி :**

ஒரு பிடி பச்சையரிசியுடன் முற்றிய சாறடைவேர் இரண்டையும் சேர்த்துத்தண்ணீர் விட்டு ஊரவைத்து நன்முக அரைத்து அடைதட்டிச் சாப்பிடவும். பசுவின் நெய்யில தோய்த்து உட்கொள்ளவும். 18 வித எலிகடிகளும் 8 நாட்களில் தீரும்.

அடுத்து இவர் வைத்திய சாஸ்திரத்தில் இடம் பெறுவது விரண ரோகம், கரப்பான் ரோகம் ஆகிய சரும நோய்களாகும். இதில் இவர் முதலில் விரணசிகிச்சைக்குத் தேவையான ஆயுதங்களைப் பற்றியும், அவற்றை சுத்தமாகக் கையாள வேண்டிய முறைகள் பற்றியும் கூறுகிறார். சரும நோய்களான பிளவை, புற்றுநோய், குஷ்டம், முதலிய பல நோய்களுக்கும் குறிகளும், அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. பல மேல் நாட்டு மருத்துவர்களாலும் குணப்படுத்த முடியாத சில புற்றுநோய்கள் சரபோஜி மன்னரின் வைத்திய சாஸ்திரத்தில் கண்ட முறைப்படி சிகிச்சை செய்து அதனால் அந்நோய் தீர்க்கப்பட்டன என்று சில உண்மைகளால் அறியமுடிகிறது.

அடுத்து பித்தரோக சிகிச்சை என்னும் தொகுதியில் பித்தத்தினாலுண்டாகும் பலவித நோய்கள் பற்றியும், அவற்றிற்கு பயன்பெறக்கூடிய மருந்துகள் பற்றியும் அவை கையாள வேண்டிய முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. சாத்திரங்களில் கூறப்படும் பித்தத்தின் வகைகளான பாசகம், ரஞ்சுகம், ஸாதகம், ஆலோசகம், ப்ராஜம் முதலிய 5 வகைகளைப் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. பித்தததினால் உண்டாகும் 40 வகைப் பயித்தியங்களையும் பற்றிக்கூறுகிறது. அவைகளுக்கு சித்தவைத்திய முறைப்படி மருத்துவம் கூறப்படுகின்றது.

உதாரணமாக பயித்தியம் பிடித்தவனுக்கு நசியம் :-

வெள்ளைச் சாரணைவேர், ஈரவெங்காயம் இவை இரண்டையும் இடித்துப்பொட்டணம் கட்டிக்கொண்டு இரண்டு துளி இரண்டு மூக்கிலும் நசியம் செய்தால் பயித்தியந் தீரும். இவ்வாறு 3 நாட்கள் செய்யவும்.

அடுத்து பேதிமுறைகளும், அதிசாரசிகிச்சையும் பற்றிக்கூறப்படுகின்றது.

வாதாதிஸாரம், பித்தாதிஸாரம், கபாதிஸாரம், திரிதோஷாதிஸாரம், பயாதிஸாரம், துக்காதிஸாரம், ரத்தாதிஸாரம் என அதிஸாரம் ஏழும் விளக்கப்பட்டுள்ளன. கிரகணிரோக லக்ஷணங்கள், அதிஸாரநிதானம், கிரகணிநிதானம் முதலியனவும் கூறப்படுகின்றன. இவற்றிற்கு மருத்துவம் பெரும்பாலும் ஆயுர்வேத முறையில் அடங்குகின்றன.

அடுத்து கூறப்படுவது உளமாந்தை, க்ஷயரோக சிகிச்சையாகும். இதில் உளமாந்தைகளின் வகைகளான வாத உளமாந்தை, பித்த உளமாந்தை, கபஉளமாந்தை, தொந்த உளமாந்தை முதலியன பற்றிக்கூறப்பட்டுள்ளன. பிறகு க்ஷயரோகங்களின் வகைகளான பிர்மக்ஷய லக்ஷணம், ராஜக்ஷயம், வைசியக்ஷயம், சூத்ரக்ஷயம், பித்தக்ஷயம், வாதக்ஷயம்

சிலேத்துமக்ஷயம், வாதபித்தக்ஷயம் வாதசிலேத்துமக்ஷயம் பித்தசிலேத்தும க்ஷயம், விகாரக்ஷயம், தொந்தக்ஷயம், சாத்யக்ஷயம் முதலியன பற்றியும் க்ஷயரோகத்தின் நிதானம், குறிகள், காரணங்கள், உளமாந்தை ரோக காரணங்கள் முதலியவைகளும் கூறப்படுகின்றன.

செல்வத்துள் எல்லாம் சிறந்தது மக்கட்செல்வம் என நம் முன்னோர்கள் உரைத்தனர் அச்செல்வத்தைப் பெரும பேறுகக் கருதிய மன்னர் சரபோஜி அதற்கென்று ஆயுர்வேதத்தில ஒரு தனிப்பகுதியை விவரித்திருக்கிறார். அது கர்ப்பிணி பாலரோக சிகிச்சை முறைகள் என்ற பகுதியாகும்.

இதில் கர்ப்பம் ஏற்படுவதற்கான ஏதுக்கள், ருதுவின் லக்ஷணங்கள், சரியான கர்ப்பம் தரிப்பதற்காக ஸ்திரீ, புருஷர்கள் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள், கர்ப்பம மாதந்தோறும் வளர்ச்சியடையும் விதம், கர்ப்பம் போஷிக்கப்படும் விதம் முதலியவைகள் கூறப்பட்டுள்ளன. மேலும் கர்ப்பிணியின் ஆகாரமும், போஷணை விதிகளும், கர்ப்பிணி செய்யக்கூடாத காரியங்களும அதனால் ஏற்படும தீமைகளும், அகால பிரசவத்திற்குக் காரணங்கள், கர்பம் தரித்த பின்னர் ஏற்படும் கோளாறுகளும் அதற்குச் சிகிச்சை முறையும கூறப்பட்டுள்ளன.

இனி குழந்தைகளுக்கென்று தனிப்பட்ட முறையில் குழந்தைகள் கணச்சூட்டுக்கு மருந்துகள், மாந்த எண்ணெய், பேதி எண்ணெய், உரம் விழுந்த பிள்ளைகளுக்கு மருந்து, தோஷத்திற்கு, குழந்தைகள் புஷ்டியுடன் இருக்க, கீரி நோய்க்கு, கீரிப்பூச்சி நோய்க்கு முதலிய குழந்தைகளின் வியாதிகளுக்கு சித்தவைத்திய முறைப்படி மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

மன்னர் சரபோஜி மக்களுக்கு மட்டுமின்றி மாக்களுக்கும் வைத்திய முறைகளை சேகரித்தும், எழுதியும் வைத்துள்ளார் நமது பழைய வைத்திய நூல்கள மிருகவைத்தியமும, பக்ஷிகளின் வைத்தியங்களையும் பற்றிக் கூறுகின்றன. இருப்பினும் மன்னர் சேகரித்து வைத்திருந்த மிருக வைத்திய, பக்ஷி வைத்திய முறைகள் பற்றிய ஏட்டுச் சுவடிகள் மிகக்குறைந்த அளவிலே தான் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து ஓரிரு வைத்திய முறைகளே கூறப்பட்டுள்ளன. முதலில் கூறப்படுவது மாட்டு வாகடம் என்னும் பசு, காளை மாடுகளின் வைத்தியமாகும். இதில் மாட்டினங்களின் தேக அமைப்பும், வளர்க்கும் முறைகளும், நோய்காணும் விதங்களும் அந்நோய்களுக்கேற்ற நம் நாட்டு வைத்திய முறைகளும் கூறப்பட்டுள்ளன. பசுக்களின் மகத்துவம், மாடுகளின் ஆயுள், அவைகளின் பற்கள், நல்ல தேக அமைப்புபெற்ற மாடுகள், உசிதமில்லாத தேக அமைப்புள்ள மாடுகள், அவைகளின் நிறம், சுழிகளின் தன்மை, மாடுகளைப் பராமரிக்கும் முறைகள், தீனி, குளிப்பாட்டும் விதி,

மாட்டுககொட்டில அமைககும்விதம, சினைமாடுகள, கன்று இவைகளைப பாதுகாககுமமுறை முதலியனவும, பிறகு மாடுகளுககு வரும் நோயகளான அழல வெககை நோய, உடுககை நோய, கநவடிநோய போனற இன்னும பலவித நோய்களுககு சிகிசசை முறையும, மருநதும கூறப்பட்டுளளன மேலும் மாடுகளை பநதயங்களுககு பயிறசிதரும முறையும விளக்கப பட்டுள்ளன.

அடுத்து குதிரை வைததியம. இதில குதிரைகளின பிறப்பு வரலாறு, உபயோகஙகள, பெருமை, குணஙகள, அவைகளின பறகளைக்கொணடு வயதுகளை அறியுமமுறை, தேகததின் சுப, அசுப லக்ஷணஙகள, நிறங்களின் பிரிவுகள, பஞசகலயாணி, அஷட கலயாணி, முதலிய குதிரைகள பற்றியும, குதிரைகளுககுணடான கிளிஞசல சுழி, கொடிசசுழி, தரேதாக்னி சுழி, மலவி மொக்குச்சுழி முதலிய 10 சுழிகளின அமைபபும, குறிகளும கூறபபட்டுளளன. அததுடன் குதிரைகளுக்குவரும அண்டசாலைநோய, அரணைகடிக்கு, கமரி நோய, கததசூலைநோய, கவவைநோய், குளயபு வெடிபபுகககு முதலிய எண்ணற்ற பலவித நோய்களுககும, அவறறிறகான சித்தவைததிய சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுளளன.

அடுதது பக்ஷிகளின வைததிய முறைகளில கோழிவைத்தியம் கூறப பட்டுள்ளன. கோழிகளுக்கு வரும நோயகளான அகிலி, அமமை, அஜீரணம, கழிச்சல நோய, கொககுநோய, கருபபு உருண்டை, தலைநோய், நடுககல் வியாதி, பூசசி (பேன, சளளு) உடல பருக்க, வாந்திக்கு மருநது போன்ற நோய்களின் தனமையும, சிகிசசை முறைகளும் கூறபபடடுளள தோடு, சேவல் சண்டையும, சணடைச சேவல்களையும் பயிறறுவிக்கும் முறைகளும், வளர்ககும விதங்களும கூறபபட்டுள்ளன.

இன்னும் அகததியர் 2000, போகர் நிகண்டு, சரபேந்திர வைத்திய ரத்னவளி முதலான பல வைத்திய நூல்கள் அனுபவ சித்தமான முறைகளை விளக்கிக் கொணடிருக்கின்றன. இநத வைததிய நூல்களின பிரதிகள எமது நூலகததில வெளியிட்டு, விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. மன்னர் வளர்தத வைத்திய நூலகளில பல இன்னும் நல்ல பலனைத்தந்து பல மக்களையும காதது வருகினறன. எனவே நாம் அனைவரும் அவர்தம நூல் கொண்டு பலனபெறறு அவர்தம நாமம் வாழ்ததி வாழ்வோமாக.

வாழ்க சரபோஜியின் நாமம்!

11-12—1812	Date of composition of Kumara Sambhava Champu.
1815	As a token of the Victory of the British over Napoleon, Manora was built at Sethubhava Chatram.
1818	The marriage of Shivaji Raja Sahib, son of Raja Serfoji was celebrated.
23—9—1820	Serfoji left Tanjore on his pilgrimage to the holiest of holy cities, Benares.
24—4—1822	Returned to Tanjore after Benares tour.
1825	Bhonsle Vamsa Charitam was written by Poet Venkatesa Bhattar. This was inscribed in the walls of Big temple.
30—3—1826	Robinson and Bishop Heber visited the Palace.
1827	Grand-daughter was born to Serfoji.
28—3—1829	Had interview with Bishop Heber and he admired Serfoji.
8—3—1832	Serfoji Maharaj passed away.

Compiled by:

M. SEERALAN, B. A.
(Librarian - Grade II)

சரபோஜி மன்னரும் மராத்தி இலக்கியமும்

T. R. Bheema Rao, Marathi Pandit.

தஞ்சை, பெருமைவாய்ந்த மூன்று பேரரசுகளால் ஆளப்பட்ட சிறப்புடையது. அவை சோழவம்சம், நாயக்கவம்சம, போசலவம்ச மகாராஷ்டிரர்கள்.

இவர்கள முறையே நாட்டைச செவ்வனே ஆட்சி புரிந்து மக்கள் நலவாழ்விலேயே தங்களை ஈடுபடுத்திக கொண்டார்கள. இச்செயதிகளை வரலாறு மெய்ப்பிக்கிறது.

நாட்டை ஆண்ட அரசர்கள் கலைவளர்ச்சியில் ஆர்வம் கொண்டு விளங்கினர். தஞ்சையை அரசாண்ட இரண்டாவது மகாராஷ்டிர அரசரான சகஜி முதல் கடைசி அரசர் சிவாஜி ராஜா வரையில் கலைவளர்ச்சியில் ஆர்வமகொண்டு, தங்களை அதில ஈடுபடுத்திககொண்டனர். அவ்வகையில் இரண்டாம சரபோஜி மன்னர் தம் நேரம் முழுவதையும் கலைக்காகவே செலவழிததார், மிகப பழமையான சரஸவதி பண்டாரகததையும் பாதுகாத்தார்.

மன்னர் சரபோஜி மன்னராக நியமிக்கப்பட்டபோது, அரசு நிர்வாகம் யாவும் அன்னிய நாட்டவர்களான ஆங்கிலேயர் வசம சிககி இருந்தது. மன்னர் என்ற பெயரில சரபோஜி அரசராக இருந்தார். அககாலததில் இருந்து சூழநிலைககுத் தககவாறு ஆங்கிலேயர் சரபோஜி மன்னருடன் ஓர் உடனபடிககை செய்துகொணடு தஞ்சையின் அரசுரிமை யாவற்றையும் பெற்றனர். இதனால் நாட்டு நிர்வாகப் பொறுப்பிலிருந்து சரபோஜி மன்னர் விடுவிக்கபபட்டார்.

இச்சந்தர்ப்பத்தை, சரபோஜி மன்னர் நல்லவிதமாகப் பயன்படுத்திக் கொண்டார். இவர் சிறுவயது முதற்கொண்டே டேனிஷ்பாதிரி ஸ்வாட்ஸ் அவர்களிடம் ஆங்கிலம கற்றதனால், பொது அறிவு வளர்ந்தது. சமஸ்கிருதம, மராத்தி, தமிழ் யாவற்றையும் தகக புலவர்களிடம பயின்று தேர்ச்சிபெற்றார். இவர் பல மொழிகளைப் பயின்றதனால் பல அரிய விஷயங்கள் தெரிந்துகொள்ள முடிந்தது. இவருக்குப் பிற்காலத்தில் பேரும் புகழும் கிடைத்தன.

ஆட்சிப் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட சரபோஜி தாம் கற்ற பல மொழிப புலமையை உபயோகித்து பல புலவர்களை தம வசம் வைத்துக்கொண்டு, அரிய பல இலக்கியங்கள இயற்றக் காரணமாக விளங்கினார். மன்னர் சரபோஜியும் சங்கீதம், நாடகம், நாட்டியம், சித்திரம்

போன்ற கலைகளில் ஆர்வம்கொண்டு இத்துறையில பல பணிகளைச்செய்து தம் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

சரபோஜி மன்னர் ஆதரவில், சமஸ்கிருதம், மராத்தி மறறும் தமிழ ஆகிய மொழிப புலவாகள் இயல, இசை, நாடகம ஆகிய மூனறு துறைகளில் பல நூலகளை இயறறினர்கள். அந்நூலகளில சரபோஜி மன்னரின் குணாதிசயஙகளைப புகழந்து பாடியும், தெயவபகதி, தாம சிறதனை, மொழிப்பறறு, கலைத்திறமைபபுலவர்களை ஆதரிததுப் பொனனும பொருளும கொடுத்து மொழி விதயாசம் பார்ககாமல் ஆதரிதத தன்மை இவை யாவறறையும கூறியிருககினறனா. புலவர்கள தனியாக பல நூலகளை எழுதியும, சரபோஜி மன்னர் பெயரில பல நூல்களை எழுதியும அரங்கேறறியும் இருக்கிறார்கள். மனனர் சரபோஜியின் புகழசசியில மகிழநத புலவர்கள "மன்னரின் நிழலில் வாழும் நாஙகள செஞ்சோற்றுககடனைச செலுததுவ தற்காக இந்நூலகளை சரபோஜி மன்னர் வேணடுகோளினபடி இயற்றினோம" என்று கூறியுள்ளனர்.

மன்னர் சரபோஜி புலவர்களுக்கு கொடுத்து வந்த ஆதரவினாலும், கொடையாலும், சமஸ்கிருதம, மராத்தி, தமிழ் ஆகிய மொழியில் இலக்கியமும், வைத்திய சாஸதிரமும, சித்திரககலையும் வளாந்தன.

இப்படைப்புக்கள் யாவும இன்னும புகழ்பெறற 'சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில்' இருந்து மன்னர் சரபோஜியின் புகழை எடுததுக கூறு கின்றன. இந் நூல்கள இருககும் வரையில் மன்னரின புகழ ஓங்கி நிறகும். பெருமை வாய்ந்த மன்னர் சரபோஜியின் காலததிய புலவர்களைபபற்றியும, மராததி நூல்களைப்பற்றியும இஙகே காண்போம.

மன்னர் சரபோஜியும் மராட்டிப் புலவர்களும்

1. இரண்டாம் சரபோஜி மனனர் காலத்தில வாழ்நதவர்கள:-

விருபாட்சகவி, ரங்கநாதகவி, கோவிந்தகவி, உடகே கோவிந்தாச் சாரியார், துண்டிசுதசிவா, ராமசகா முதலியவர்கள்.

இப்புலவர்கள் தம் தாய்மொழியான மராத்திமொழியில் பல இலக்கியங் களைப் படைத்தனர். இவர்களைத் தவிர கிருஷ்ண சாஸ்திரி, வெங்கடேச சாஸ்திரி, நரசிமம சாஸ்திரி, அயபு தீட்சிதர், கிருஷ்ணஸ்வாமி சக்கரவர்ததி, தமமாசாா, மனனார் கிருஷ்ணாச்சாா, ஸ்ரீநிவாசகவி, சங்கீத மும்மூர்த்தி களில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர், மராட்டியப்புலவர் ஷிருசாமி காட்கேயும, சமஸ்கிருதம், மராத்தி ஆகிய மொழிகளில் புராணவரலாறு

ஆதாரங்களைக்கொண்டு பல இலக்கியங்களைப் படைத்தார்கள். தங்களை ஆதரித்த சரபோஜிமன்னனைப் புகழ்ந்து பாடியும் பெருமையுறச் செய்து உள்ளார்கள். இப்புலவர்களைப் பற்றியும் இவர்கள் இயற்றிய இலக்கியப் படைப்புக்களைப் பற்றியும் விவரமாகக் கீழே காண்போம்.

1. விரூபாட்சகவி :—

விரூபாட்சகவி சரபோஜி மன்னருக்கு மிகவும் வேண்டியவராக இருந்தும், சரஸ்வதி பண்டாரகத்தில் உள்ள சமஸ்கிருத மொழியில் காணும் பல புராண இதிகாச நூல்களின் ஆதாரத்தைக் கொண்டும் மராத்தி மொழியில் பல நூல்களை மொழி பெயர்த்துள்ளார்.

பவிஷ்யோத்கிர புராணத்தை ஆதாரமாகக் கொண்டு 'அக்னீஸ்வர மகாத்மியம்', ஸ்காந்தம் சனத்குமார சம்ஹிதா - சிவரகஸ்ய ஸ்தோத்திர கண்டக்கின் ஆதாரத்தைக் கொண்டு 'ஆதிகைலாச மகாத்மியத்'தையும், பத்மபுராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு 'மாகமகாத்மியம்'; பிர்மகைவர்த்தபுராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் வரலாற்றையும், காவேரி நதியின் ஐந்து பிரிவுகளைப்பற்றி விவரித்து 'பஞ்சநத மகாத்மியம்', என்ற தலைப்பில் ஒரு நூலும் எழுதியிருக்கிறார் இவ்வாசிரியரின் இப்பஞ்சநத மகாத்மியம் நூல் நமக்கு முழுவதுமாகக் கிடைக்கவில்லை. அது ஒரு பெரும் குறையே. இவருடைய மற்றோர் அரிய படைப்பைப் பற்றி நாம் மிகவும் பெருமை கொள்ளத் தக்கதாக இருக்கிறது. அது யாதெனில் தமிழ் கூறும் நல்லுலகம், சிறப்புடன் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றுப் பெருமைகளைக் கூறும் 'சிவபக்த மகாத்மியம்', என்னும் தலைப்பில் வடமொழியில் ஹரதாஸர் என்பவர் இயற்றியதை ஆதாரமாகக் கொண்டு, 'பக்தவிலாஸம்', என்ற தலைப்பில் மராத்தி மொழியில் ஒரு நூல் இயற்றி இருக்கிறார்.

இப்புலவர் வடமொழியில் காணும் பல புராண வரலாற்றினை பாமர மொழியினரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மராத்தி மொழியில் மொழி பெயர்த்து எழுதினார். அது போற்றத் தகுந்ததே. இவையாவும் தெய்வத்தன்மை பொருந்திய வரலாறுகள் ஆகும். அதைவிடப் பெருமைப் படக்கூடியது என்று புலவர் நினைத்து, தமிழ் நாட்டில் தெய்வ பக்தியும் சமயநெறியும் கொண்டு பண்புடன் வாழ்ந்து, சைவத்தை வளர்த்த பெரியோர்களின் வரலாற்றினையும் தம் தாய்மொழியினர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மராத்தி மொழியில் மொழிபெயர்த்து எழுதியிருக்கிறார் இதனால் மொழி வேறுபாடு கொள்ளாமல் புலவர் இலக்கியப்பணி செய்தது நமக்குப் புலனாகிறது.

விரூபாட்ச கவி தாம் இயற்றிய மேலே கூறிய நூல்களைச் சரபோஜி மன்னரின் வேண்டுகோளின்படியே வடமொழியிலிருந்து மராத்தி மொழியில் மொழி பெயர்த்ததாகத் தம்நூலில் கூறுகிறார். மேலும் சரபோஜி மன்னரின் தெய்வ சிந்தனையையும், தயாள குணத்தையும், அவர் புலவர்களிடம் கொண்டுள்ள மதிப்பினையும், தான தருமங்களையும் புகழ்ந்து கூறுகிறார் மேலும் சரபோஜி மன்னர் காசி முதலான புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வந்த நிகழ்ச்சிகளையும் புகழ்ந்து கூறுகிறார். மேலும் மன்னர் சரபோஜியின் " நவவித்யா கலாநிதிசாலா " என்ற கல்விக் கூடத்தினைக் கூறிப் புகழ்கிறார். இவ்விதமாக மேலே கூறிய நூல்களைப் புலவர் கி பி 1826 முதல் 1828 முடிய ஆண்டுகளில் இயற்றியதாகத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

2. ரங்க நாதகவி :—

ரங்கநாதகவி சரஸ்வதி பண்டாரகத்தில் காணும் புராண ஆதாரங்களைக் கொண்டு மராத்தி மொழியில் நூல்களை மொழி பெயர்த்துள்ளார். அவை ' கார்திக மகாத்மியம் ', ' துலா மகாத்மியம் ' முதலியவையாகும்.

இவ்வாசிரியர் இவைகளைத் தவிர நாடக இலக்கியத்திற்கு அரும்பணி புரிந்திருக்கிறார். மராத்தி மொழியில் முதன் முதலில் நாடக இலக்கியம் தஞ்சை மகாராஷ்டிரர்கள் ஆட்சியில்தான் படைக்கப்பெற்றன. இதை மிகத் தெளிவாக மகாராஷ்டிரதேச தற்கால சரித்திர நூல் ஆசிரியர்கள், ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும் அப்பெருமையை முழுவதும் பெறக் கூடிய நாடக இலக்கிய கர்த்தா, தஞ்சையை அரசாண்ட முதல் மகாராஷ்டிர மன்னர் ஏகோஜியின் மூத்த மைந்தர் சகஜி மன்னரையே சாரும். சகஜிமன்னர் நாடக இலக்கியத்திற்கு நல்ல சேவை செய்து. சமஸ்கிருதம், மராத்தி, தெலுங்கு, தமிழ் மற்றும் ஹிந்துஸ்தானி ஆகிய மொழிகளில் புராண வரலாறுகளின் ஆதாரத்தைக்கொண்டு பல அரிய தலைப்புக்களில் நாடகங்களை இயற்றியிருக்கிறார். அவை சங்கீத சாகித்யங்களைக் கொண்டு முதன்மையாகத் திகழ்கின்றன.

சகஜியைப் பின்பற்றி அவருக்குப்பின் தஞ்சையை அரசாண்ட பிரதாபசிம்ஹ ராஜாவும் பல நாடக நூல்களை இயற்றினார்.

இவர்களை முன்னோர்களாகக்கொண்டு இரண்டாவது சரபோஜி மன்னர் பெயரில் சில நாடக நூல்கள் காணப்படுகின்றன. ஆனால் அவையாவும் மேலே கூறிய ரங்கநாத கவியின் இலக்கியப் படைப்புக்களேயாகும்.

ரங்கநாதகவி இயற்றிய கணேசவிஜயம் கணேசலீலார்ணவம் ஆகிய நாடகங்களில் அவற்றைத் தாம் இயற்றியதாகவே அந்நாடகங்களில் கூறுகிறார். இவை தவிர சரபோஜி மன்னர் பெயரில் காணும் மற்ற நாடகங்களான

சிவராத்திரி உபாக்கியானம், கங்காவிஸ்வேஸ்வர பரிணயம், மோஹினி மகேச பரிணயம், ராதாகிருஷ்ண விலாஸம் முதலிய நாடகங்களின் அமைப்பை நோக்குங்கால் மேலே கூறிய ரெங்கநாத கவியின் படைப்புக்களை ஒத்துக் காணப்படுகின்றன. ஆகையால் இந்த நாடகங்களும் ரங்கநாதகவியே இயற்றி சரபோஜி மன்னர் பெயரில் பரந்தமனத்துடன் அங்கிதம் செய்திருக்கிறார் என்பது கண்கூடு மேலும் ரங்கநாதகவி தம் நாடகங்களில் சரபோஜி மன்னரை ஆசீர்வதித்துப் புகழ்ந்து கூறுகிறார்.

இவ்வாறாக ரங்கநாதகவி இயற்றிய நாடகங்கள் நவராத்திரி விழாவிலும், விநாயகசதுர்த்தி உற்சவ விழாவிலும், அரசர் அரண்மனை அரங்கிலும், பிருகதீஸ்வரர் கோவிலில் வசந்த உற்சவகாலத்திலும் நடத்தி யிருப்பதாக நாடகக் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது.

இந்நாடகங்கள் மராத்தி மொழியில் அமைந்து இருந்தபோதிலும், அக்காலத்தில் தஞ்சையில் வாழ்ந்த மக்கள் இந்நாடகங்கள் உயர்ந்த சங்கீத அமைப்பிலும் புராண வரலாற்றைப் பின்பற்றியும் இருப்பதை உணர்ந்து நல்லவிதமாக ஆதரித்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

ஆசிரியரின் சிவராத்திரி உபாக்கியானம் கங்கா விஸ்வேஸ்வரபரிணயம், மோஹினி மகேசபரிணயம் போன்ற நாடகங்களில் சரபோஜி மன்னரை இரண்டாம் துளஜா தத்து எடுத்துக்கொண்ட விவரத்தினையும், அவர் வம்ச பரம்பரை விவரத்தையும் குறிப்பிட்டிருக்கிறார் அத்துடன் சரபோஜி மன்னரின் நிழலில் வாழும் நான் இந்த நாடகத்தினை இயற்றினேன் என்றும் குறிப்பிடு கிறார். இவை யாவற்றையும் நோக்குங்கால் சரபோஜி மன்னர் காலத்தில் இயற்றிய நாடகங்கள் யாவற்றிற்கும் ரங்கநாதகவியே ஆசிரியர் என்று நமக்கு நன்றாக விளங்குகிறது இதைத் தவிர தேவேந்திர குறவஞ்சி என்னும் நாடகம் உலகத்தில் உள்ள பல கண்டங்களையும் அவற்றில் உள்ள தேசங்களையும் அத்தேசங்களில் உள்ள முக்கிய நகரங்கள், மலைகள், ஆறுகள் முதலிய பெயர்களையும் வருணித்து உலக பூகோள வரலாற்றை அறியும் வண்ணம் அமைத்து அதை ஒரு குறப்பெண் வாயிலாக பாடல் மூலமாக உணர்த்து வதாக இவ்வாசிரியர் இந்நாடகத்தினை இயற்றியிருக்கிறார். இந்த விதத்தில் மராத்திய போசலகுல மன்னர்கள் ஆதரவினால் இதுபோன்ற நல்ல இலக்கிய படைப்புகள் கவிஞர்களால் படைக்கப்பட்டன.

மேலே கூறிய நாடகங்களைத் தவிர தமிழில் நாயன்மார்களின் சரித்திரத்தில் புகழுடன் காணும் திரு நீலகண்ட நாயனார், திரு கண்ணப்ப நாயனார் இவர்கள் வரலாற்றையும் மராத்தி மொழியில் ஹரிகதா காலட்சேபம் செய்யும் வடிவத்தில் ஸ்லோகம், ஆர்யா, சாகி, திண்டி, பதம், லாவணி

போன்ற மராத்திமொழி சந்தத்தில் அமைத்து இயற்றப்பட்டிருக்கிறது. இவை யாவும் சரபோஜி மன்னர் பெயரிலேயே நம் நூல் நிலையத்தில் காணப்படு கின்றன இந்நூலின் தொடக்கத்திலும் முடிவிலும் மாத்திரம் சரபோஜி மன்னர் பெயர் குறிப்பிடப்படுகிறது. ஆனால் கதையில் காணும் பாடல்களிலோ அல்லது வேறு எந்த இடத்திலோ சரபோஜி மன்னர் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆகையால் இந் நூலாசிரியர் கதையை அமைத்துத் தொடக்கத்திலும் முடிவிலும் அரசரைப் புகழ்ந்து பாடி இச் சங்கீத நூல்களை இயற்றி இருக்கிறார் என்று கருதவேண்டியதாக இருக்கிறது.

மேலே கூறிய இருகதைகளைத் தவிர ஸ்காந்த புராணத்தில் காணும் கிராதார்ஜுனீயம் உமாமகேஸ்வரவிரதம் பஞ்சாட்சரி, விபூதி சிவராத்திரி மகிமையை வருணிக்கும் கதையை யும் சனிப்பிரதோஷம், பஞ்சப்பிரதோஷம் போன்ற விரதத்தின் மகிமையைக் கூறும் கதையும் இவரால் இயற்றப்பட்டிருக் கிறது.

இவ்வாறாக ரங்கநாதகவி சரபோஜி மன்னரின் ஆதரவிலிருந்து மன்னர் மனமறிந்து மேலே கூறிய அரிய புராண வரலாறு நூல்களை இயற்றிப் பரந்த மனத்துடன் சரபோஜி மன்னருக்கு அங்கிதம் செய்து மதிப்புடன் வாழ்ந்து தன் தாய்மொழியான மராத்தி மொழிக்கு அரிய இலக்கியப்பணி செய்திருக்கிறார் என்று அறியமுடிகிறது.

3. கோவிந்தகவி :—

கோவிந்தகவி சமஸ்கிருதத்தில் ஆக்நேய புராணத்தின் ஆதாரத் துடன் 'தனுர்மாத மகாத்மியம்' ஸ்கந்த புராணத்தின் ஆதாரத்துடன் 'வைசாக மகாத்மியம்' பிர்ம்மகைவர்த்த புராணத்தின் ஆதாரத்தைக் கொண்டு 'பஞ்சநத மகாத்மியம்' என்ற திருவையாற்று ஸ்தலபுராண நூலும் மொழி பெயர்த்திருக்கிறார். இந்த 'பஞ்சநத மகாத்மியம்' நூல் முழுவதுமாக நமக்கு கிடைக்கவில்லை. இப்புலவர் தம் நூல்களில் மன்னர் சரபோஜியை 'சிறந்த சிவபக்தன் தயாள குணமுள்ளவன், தர்ம சிந்தனை கொண்டவன் புலவர்களை அன்புடன் ஆதரிக்கும் தன்மையுடையவன்' என்று புகழ்ந்து கூறியிருக்கிறார்.

4. உயகே கோவிந்தாச்சாரியார் :—

இப்புலவர் சரபோஜி மன்னருக்கு மிகவும் அன்புடையவராக இருந்து சிவலீலா, ஹரிலீலா', 'ராம-உமா-சம்வாதம்' என்ற தலைப்புகளில் ஹரி கதை செய்யும் வடிவத்தில் (நிருபணம்) அமைத்துச் சிறு நூலாக இயற்றி இருக்கிறார். இவர் ஜோதிட சாஸ்திரத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்திருக்கிறார்.

'துவாதசபாவ' என்ற தலைப்பில் பன்னிரண்டு ராசிகளின் தன்மைகளை விவரித்துச் சிறு நூலாக அமைத்து மங்களாஷ்டகம் பாடும் பாணியில் இயற்றி இருக்கிறார். இதைத் தவிர சரபோஜி மன்னரைப் புகழ்ந்து பல பாடல்களும், மங்களாஷ்டகம் ஸ்லோகங்களும் இயற்றி இருக்கிறார்.

5. துண்டி சுத சிவா :—

சிவா, சரபோஜி மன்னர் தமிழ் நாட்டில் ஸ்தல யாத்திரையாகச் சென்று வந்த விவரத்தினையும், வடநாட்டில் காசி முதலான புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வந்த விவரத்தினையும் ஒரு யாத்திரை நூலாக வருணித்து இயற்றியிருக்கிறார். இந் நூலில் சரபோஜி மன்னர் கோவிலுக்கும் புண்ணியஸ்தலத்திற்கும் சென்ற விபரமும் அவ்விடங்களில் செய்த தான தர்மங்கள், பூஜைகள் மற்றும் அப்புண்ணிய ஸ்தலங்களின் புராணவரலாறு விபரத்தினையும் சிறு குறிப்புகளுடன் தெரிவித்து மிகவும் நல்லவிதமாக இந்நூலை இயற்றி இருக்கிறார். இந்நூலின் மூலமாக புண்ணிய ஸ்தலங்களின் வரலாறுகளை தெரிந்துகொள்ள மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது.

'தீர்த்த யாத்திரை லாவணி' என்ற தலைப்பில் ஒரு நூல் காணப் படுகிறது. இந்நூல் சரபோஜியின் ஸ்தல யாத்திரையைக் குறிக்கும்படி இருக்கிறது. இந்நூல் சரபோஜி மன்னர் இயற்றியதாக குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆனால் இந்நூலின் நடையும் மொழியில் காணும் தன்மையும் பார்த்தால் 'சரபேந்திர தீர்த்தாவளி' இயற்றிய துண்டிசுதசிவாவே இயற்றி மன்னர் பெயரில் அங்கிதம் செய்து இருக்கலாம் என்று எண்ணத் தோன்று கிறது. அதற்குக் காரணம் யாதெனில் இந்நூலின் ஒவ்வொரு லாவணியின் அங்கத்தின் முடிவிலும் 'சரபோஜி சொல்கிறார், மன்னருக்கு இப்புண்ணிய ஸ்தலத்தில் ஸ்நானம் செய்ய, 'தெய்வத்தினை தரிசனம் செய்ய பாக்கியம் கிடைத்தது, போன்ற வாக்கியங்களால் முடிவடைவதால் இந்த யாத்திரை லாவணி நூல் மன்னர் இயற்றியதாகக் கொள்ள முடியாமல் இருக்கிறது. மன்னரே இயற்றி இருந்தால் தம் பெயரை சந்தேகமறக் குறிப்பிட்டிருப்பார். மேலும் முதலில் கூறிய 'சரபேந்திர தீர்த்தாவளி' என்ற நூல் 'சரபோஜி மன்னர் யாத்திரைசெய்த விவரத்தினைக் கேட்டு நான் இயற்றினேன். நான் மன்னருடன் ஸ்தல யாத்திரை செய்யவில்லை' என்றும் குறிப்பிட்டுள்ளார். இவைகளை நோக்குங்கால் 'தீர்த்தயாத்திரை லாவணி' நூலும் திருதுண்டிசுத சிவனே இயற்றியிருக்கிறார் என்று நமக்குச் சந்தேகமறத் தெரிகிறது.

சிவா இதைத்தவிர சரபோஜிமன்னர் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலில் செய்த திருப்பணிகள், சிவலிங்க பிரதிஷ்டை, ஸ்ரீரங்கம், திருவையாற்றுக்கோயில் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வந்த விவரத்துடன், 'சரபேந்திர சிவதர்ம' என்ற நூலை இயற்றியிருக்கிறார்.

இவ்வாசிரியருடைய அரிய படைபபு நாட்டிய அபிநயத்திற்கான சங்கீத சாஹித்யங்கள ஆகும் இவை சமஸகிருததததில் காணும அபிநய தர்ப்பணம், நிருத்யாத்யாய போன்ற நூல்களிலிருந்து ஆதாரத்துடன் இந்த நாட்டிய பிரபந்தங்களை மராத்தி மொழியில இயறறியிருக்கிருர். இசசாஹித்யங்கள், தமிழ் நாட்டில் மிகவும் புகழுடன் விளங்கும் கர்நாடக சாஹித்யங்களை ஒத்து நல்லமுறையில் அமைக்கபபட்டிருப்பதால், மகாராஷ்டிரர்கள நாட்டிய அபிநயத்தில் ஆர்வம் கொண்டு செய்ய நினைப்பவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம ஆகும.

6. ராமசகா :—

ராமசகா என்னும புலவர் சரபோஜி மன்னரின் ஒரே ஆண் வாரிசான திரு சிவாஜி ராஜாவுடையதும் மறற ஐந்து பெண்களின் திருமண வைபவத்தையும வருணிதது 'மங்களாஷ்டகம', என்ற ஸ்லோக வடிவத்தில் அமைத்து ஒரு நூல் மிகவும் அருமையாக இயற்றி இருக்கிருர். இதில் மாப்பிளை வீட்டாரின் குலம், கோத்திரம் பெண்வீட்டாரின் குலம், கோத்திரம் மகாராஷ்டிர மன்னர்களின் திருமணசடஙகுகளின் விவரங்கள், அதைச் செய்யும்விதம, மணமக்களின் ஆடை அணிகலங்களின் வருணனை, திருமணமண்டபத்தின ஜோடனைகள பற்றிய வருணனை, திருமணத்திற்கு வருகை தந்த பிரமுகர்கள்பற்றியதும, அரச குடும்பத்தினரைப்பற்றியதும் வருணனை, வைபவத்தில் முழங்கிய மங்கள வாத்தியங்களின் வருணனை முதலியவைகளை நேர்ததியாக விவரித்து இபபாடல்களில் கூறியுள்ளார்.

'மங்களாஷ்டகம்' என்பது இந்துக்களின் திருமணவைபவத்தின் சமயத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் சொல்லப்படும் ஸ்லோகம ஆகும். இது மகாராஷ்டிரர்களின் திருமணவைபவததில முதன்மையாகக் கொள்ளப் படுகிறது. இக்காலத்திலும் இப்பழமையான சம்பிரதாயமுறை விட்டுப் போகாமல் மகாராஷ்டிர குடும்பத்தின் திருமண சமயத்தில் இந்த 'மங்களாஷ்டக' ஸ்லோகம் பாடப்பட்டு வருகிறது.

திருமணச் சடங்கின்போது ஒருபக்கத்தில் மணப்பெண்ணையும், ஒரு பக்கத்தில் மணமகனையும் உட்காரவைத்து இருவருக்கும் நடுவில் ஒரு மங்கள பட்டு வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு இருவர் நிற்க, வைதீகர்கள் விநாயகர் ஸ்துதி முதற்கொண்டு ஆண்டவனின் பல லீலாவிநோதங்கள், குணதிசயங்கள் முதலியவற்றை வருணித்து மங்கள அஷ்டக ஸ்லோகம் பாடுவார்கள். இவர்களைப்போலவே பல தேர்ச்சிப்பெற்ற மகாராஷ்டிர சங்கீத விற்பன்னர்கள், நடைபெறும் திருமண வைபவத்தில் காணும் விழாக் கோலத்தையும், சாப்பாட்டு வகைகளையும், நகர வருணனை, ஸ்தல வருணனை, கோயில்கள்

வருணனை நதிவருணனையும், சங்கீதராகங்கள் அமைப்பு புஷ்பங்களின் பெயர்கள் போனறவைகளையும, இம் மகாராஷ்டிரர்களின் பழமையான சமபிரதாய முறையை அனுசரித்து, திரு ராமசகா புலவர் சரபோஜி மன்னரின் மக்களின் திருமண வைபவத்தை வருணிததுப் பாடி இருக்கிறார். இப்பாடல் களின் மூலமாக நாம சரபோஜி மன்னர் காலததிய திருமண வைபவ முறைகளைத தெரிந்து கொளளலாம்.

1 சரபோஜி மன்னரைப் புகழ்ந்து பாடிய புலவர்கள் :—

திரு கிருஷ்ண சாஸ்திரி, சககரவர்ததி, தமமாச்சார், நரசிமம சாஸ்திரி மனறாா கிருஷணாச்சார், சஙகீத முமமூாததிகளில ஒருவரான முத்துசாமி தீக்ஷிதா, வெஙகடேச சாஸதிரி, ஸ்ரீனிவாச கவி, சுடபுதீக்ஷிதர், ரங்கநாத கவி, முதலிய புலவாகள, சரபோஜி மனனரின குணநலனகள், தாம சிநதனை, தெயவபகதி, புலவர்களை ஆதாிககும தனமை, மொழிப்பற்று முதலியவைகளைப் புகழநது, சமஸகிருதம, மராததி ஆகிய மொழிகளில் பல பாடலகள் பாடி இருககிறாாகள. இவாகளைத தவிர மராட்டிய புலவர்கள் கவிராஜோபா, உடமக கோவிநதாச்சாா, ஹீருசாமி காட்கே, போன்றவர் களும் சரபோஜி மன்னரைப் புகழ்நது பாடி இருக்கிறார்கள.

இப்புலவர்களின் பாடல்களைப பார்க்கும்போது மன்னர் சரபோஜி புலவர்களை நல்ல விதமாக மதிதது ஆதரித்து வந்திருககிறார் எனத்தெரிகிறது.

2. சரபோஜி மன்னர் காலமும் வைத்திய நூல்களும் :—

சரபேந்திர வைத்ய ரதனாவளி வெளியீட்டில், பதிப்பாசிரியர் திரு. கிருஷ்ணசாமி மாடிக்ராவ் அவர்கள் கூறுவதாவது:

சரபோஜிமன்னர், அரண்மனையில் ' தன்வந்தரி மகால் ' ஏற்படுத்தி, வைத்திய சம்பந்தமான ஆயுர்வேதம, சித்தம், யூனானி நூல்களைப் பண்டிதர் களைக்கொண்டு ஆய்வுசெய்தார். பழமையான நூல்களில் உள்ள விஷயங் களைத் தொகுத்து அநுபோக வைத்திய முறைக்கு ஒரு புதிய தொகுப்பு தயாரித்தார்.

இம்மன்னர் காலத்தில் வைத்திய நூல்கள் ஆய்வுக்கு, பலப் புலவர்கள் இருந்தார்கள்.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், சுப்பராயகவி, வேலாயுத முதலியார் ஆகியோர் ஆவர். வேலாயுத முதலியாரின் வைத்திய முறைத் தொகுப்புப்பற்றி திரு மாடிக்ராவ் கூறுகிறார்.

முன்னுரை பக்கம் 7ல் வைத்திய நூல் ஆய்வுககும புதிய படைப்புக்கும் உதவியவர்கள் திருவேங்கடம் பிள்ளை, தாமோதரம்பிள்ளை, பிள்ளை பெருமாள் வைத்தியர், வெங்கடாஜலம் பிள்ளை, ரங்கநாத நாயக, துபாஷ் கிருஷ்ணப்ப நாயக், அய்யா கண்ணுபிள்ளை, பஞ்சநதம் பிளளை முதலியோர் குறிப்பிடப படுகின்றனர்.

நூலகத்தில் உள்ள வடமொழி, தமிழ், தெலுங்கு மொழியில வைத்திய சாஸ்திர நூல்களிலிருந்து சரபோஜி மன்னரால் தொகுக்கப்பெற்ற வைத்தியச் செய்திகள் பற்றி திரு மாடிகராவ விரிவாக எழுதியுள்ளார்

ஷஹாஜி மன்னர், முதல் சரபோஜி மன்னர் வரையிலான காலத்திலும் தமிழ் வைத்தியச்சுவடிகள் தொகுக்கப்பெற்றன. இவ்விவரம் திரு K.R. சுப்பிரமணியம் தமது 'மராட்டியர் வரலாறு' நூலில் குறிப்பிட்டுளளாா அவை இரண்டாம் சரபோஜி மன்னர் படைப்புக்குப் பயன்; பட்டனப் பிரதாபசிம்மன் எழுதிய மதன சஞ்சீவனம் குறிப்பிடத்தக்க நூல் ஆகும்.

3. சரபோஜி மன்னரும் கஜ சாஸ்திரமும் :—

சரபோஜி மன்னர் கஜ சாஸ்திரம் பற்றி மிகுந்த ஊக்கம் கொண்டவராக இருந்தார். பழமையாகச் சரஸ்வதி நூலகத்தில் பாதுகாக்கபெற்ற உயர்ந்த ஓவியக் கைப்பிரதிகளில் கஜ சாஸ்திரம் தொடர்பான படங்களும, படங்களுக்குடைய பழமையான ஸ்லோக விளக்கங்களும உள்ளவற்றைப பின்பற்றி புதிய ஓவியக் கைப்பிரதிகளும் வரையச் செய்துள்ளார்.

கஜ சாஸ்திர விளக்கம், ரக்மாஜி பண்டிதரால் சரபோஜி மன்னரின புதல்வர் சிவாஜி மன்னரின் கட்டளைப்படி எழுதப்பட்டுத் தொகுக்கப்பட்டது.

மேலே கூறிய கஜ சாஸ்திரம், பாலகாப்பியர், வைசம்பாயனர் என்ற பெருங்கவிஞர்களால் சில நூற்றுண்டுகளுக்கு முன் தெலுங்கு மொழியிலும், வடமொழியிலும் எழுதப்பெற்றவை. இந்நூல்களைப் பின் பற்றி மராட்டிய மன்னர் ஷஹாஜி காலத்தில் படவிளக்கங்களுடன் ஓவியக்கைப்பிரதி எழுதித் தொகுக்கப்பட்டுள்ளன.

